செய்தி வெளியீடு எண்: 427 நாள்: 15.07.2019

# செய்தி வெளியீடு

## தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் பிறந்தநாள் விழா!

## தமிழக அரசு சார்பில் மூன்று அமைச்சர்கள் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி சிறப்பித்தனர்!

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 அன்று, ஆண்டு தோறும் தமிழக அரசின் சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்யப்படும் என்று, கடந்த ஆண்டு அரசால் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க இன்று (15.07.2019) பல்லாவரத்தில் அவர் நினைவு இல்லத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பி. பெஞ்சமின், தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. பொன்னையா, இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் சோ. விசயராகவன் ஆகியோர் கலந்து கொண்டு, மறைமலையடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அவர்தம் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் அவர் பிறந்து வாழ்ந்த இல்லத்தையும், நினைவிடத்தையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து சிறப்பு செய்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.**